# படிதாண்டும் கவிதை

கூட்டுப்புழு அழகு...
    அதனினும் அழகு
        வண்ணத்துப் பூச்சியாய் சிறகடிக்கும் போது !
பூக்கும் மலர் அழகு...
    அதனினும் அழகு
        மாலையாய் தொடுக்கும் போது !
காதல் அழகு...
    அதனினும் அழகு
        அதனைக் கவிதையாக பாடும் போது !
வானழகு ...
    அதனினும் அழகு
        அதில் பால் நிலா பவனி வரும் போது !
மழை அழகு ...
    அதனினும் அழகு
        அதில் தோன்றும் வானவில் தோன்றும் போது !
சிப்பி அழகு ...
    அதனினும் அழகு
        அதில் முத்து பிறக்கும் போது !
குழந்தை அழகு ...
    அதனினும் அழகு
        அது மழலை மொழி பழகும் போது !
    அதனினும் அழகு
        அம்மழலையை கொடுக்கும் தாய்மை அழகு.
விளக்கழகு
    அதனினும் அழகு
        அவ்விளக்கு கலங்கரை விளக்கமாய் ஒளிரும் போது !
உலகில் யாவும் அழகு ...
    அதனினும் அழகு
    அதனை உணர்ந்து எல்லாம் அழகு எனும் போது !
இங்கே
    குடத்தில் இட்ட விளக்காய்
        என் எழுத்து
அதனை
    கலங்கரை விளக்காய் மிளிர செய்த
        கரங்களுக்கு
என்.....
    கண்ணீரில் நன்றி கூறுகிறேன்...
        படிதாண்டும் என் குழந்தையை
பாசத்துடன் வரவேற்கும்
    என் இனிய பாச உள்ளங்களுக்கு
        பாத காணிக்கையாக்குகிறேன்....

வாழ்த்தும் நெஞ்சங்களுக்கு என்றும்.......

## வாழ்த்துக்கள்

எழுத்துக்களை
        கலவையாக்கி. . .
எண்ணங்களை
        தூரிகையாக்கி. . . .
மலர்ந்த என்
        கவிமலர்க்கு
இடம் அளித்த இதயத்திற்கு
        என். . .
                உள்ளம் கனிந்த நன்றி. . . .
தின (ம்). . .
        வாசம் மாறா மணத்துடன்
மலர்(ந்து). . .
        வாசகர் நெஞ்சிலே நிலையாய்
        வாசம் செய்யும் நாளிதழ்
உங்கள்
        தினமலர் நாளிதழ். . . . .
என். . .
        திறமைகளை வெளியிட்டு – நான்
        திங்களாய் ஒளிவீச – எனக்கு
        உறுதுணையாய் நின்ற
        தின(ம்)மலராய் நாளிதழாய்
        செழித்தோங்க வாழ்த்துக்களுடன். . . .

## உயிர்த்தெழுதல்

கல்லில் சிதைந்து
        பறக்கும் காகிதத்தில்
குருடன் போல் எழுத்து படைத்து
        குப்பையாய் கூலமாய்
கூட்டி வைத்த
        காகிதத்தை
புதை பொருள் போல் கண்டெடுத்து
        மறுஉயிர் அளிக்க. . .
போராடும் தாயைப்போல்
        என் எழுத்திற்கு உயிர் கொடுக்க
போராடும் நீயும்
        ஒரு தாய்தான் . . . . . . !!!

# தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்தால் வழி பிறக்கும்...
உடன் மகிழ்ச்சியும் பிறக்கும்...
உழுதிட்ட வயலில்...
முத்து முத்தாய விளைச்சல்கள்...
அடித்திட்ட களத்தில்...
அளவில்லா நெல்மணிகள்...
குயவன் கை வண்ணத்தில்...
குழந்தை போல் பிறந்திட்ட...
புதுப்பானையில்..
புதுப் பச்சரிசி பொங்களிட்டு...
மெல்ல மெல்ல....
ருசிக்கும் கரும்பாய்...
நினைக்க நினைக்க...
மனதில்....!
இனிக்கும் இனிய பொங்கல் திருநாளில்...
உறவுகள் உவகையில் கலந்திட...
உழுவர்களும் உள்ளம் மகிழ்ந்திட...
ஏர் பிடிக்கும் கைகள்...
இன்று...
காளை பூட்டி காற்றாய் பறந்திட...
இங்கே...
இளங்காளையர் வரிசையில் நின்றிட
வானம் வாழ்த்த....
நம்மை தாங்கும் பூமி வாழ்த்த...
இயற்கை வாழ்த்த...
இங்கே கூடியுள்ள இதயங்கள் வாழ்த்த...
பந்தயத்தில் பாய இருக்கும்...
இள நெஞ்சங்களே...
வெற்றிக் கனியை எட்டிப்படிக்க...
எங்கள் வாழ்த்துக்கள்.... !

# நட்பு

ஓடும் ஆறாய் வருடங்கள் - அதில்
சிதறும் திவலைகளாய் காலங்கள்...
உருளும் கற்களாய் மாற்றங்கள் - இதில்
ஆங்காங்கே காணும் திருப்பங்கள்....
இருப்பினும்
நீரின் மாறா தன்மைகள்....
இதில் அடங்கும்
எந்தன் உண்மைகள்......

பூவே....
பூத்தாய்...
மலர்ந்தாய்....
உதிர்ந்தாய்.....
சிரித்தாய்.....
மகிழ்ந்தாய்......
மலராய்.....மணமாய்.......இருந்தாய்.....

தென்றலாய் திருமணமாம்...
தாலாட்டிட உன்னை...
வசந்தமாய் வரவேற்றாய்.....
வண்ண மயிலென தோகை விரித்தாடி.....

முளைத்தன அங்கே....
வேதனை எனும் முட்கள் - அதில் மோதி...
சிதைந்தன உன் கனவுகள் எனும் இதழ்கள்....

அழகாய் மலர்ந்தாய்....
விழியால் சிதைந்தாய்....
மனதால் வீழ்ந்தாய்....
மனம் கல்லாய் உறைந்தாய்....

உறவுகளும் உரிமைகளும்....
முட்களாய் - இதில்
பந்தங்களும் பாசங்களும்....
பாறைகளாய் - நீயோ

முள்ளில் சிக்கித் தவிக்கும் பட்டமாய்...
பாலைவனத்துப் பாறையாய்....
இலையுதிர் காலமாய்....
மறுத்து மாறிப் போன உன் இதயத்திற்கு...
வறண்ட நிலத்தில்....
ஓர் மழைத்துளியாய்....

பட்ட மரத்தில்...
ஓர் இளந்துளிராய்....
இறுகிய பாறையில்...
ஓர் நீர் ஊற்றாய்.... அதில்..

விதையாய் சோகங்களை புதைத்து...
மரமாய் இன்பங்கள் வளர்த்து....
மலராய் மலரும் புன்னகை – உன்
முகத்தில் பூத்திட..

நீராய் உனக்கு உயிர் கொடுத்து...
உரமாய் உனக்கு வலுவுட்டி...
உறவாய் உனக்கு வேலியிட்டு...
வசந்தம் போல் நீ வாழ்ந்திட...
வாழ்க்கைப் பாதையில்...
என்றும் மகிழ்ச்சி ஒளிந்திட என்றும்
தூண்டுகோளாய் நான் உதவ – இதில்
என்றும் மிளிரட்டும்...
நம் நட்பு.............